www.padippakam.com

# ஏழைதாசன்

## ஹைக்கூ -- 100

### ( 100 கவிஞர்கள் — 100 கவிதைகள் )

✶ தமிழ் இதழியல் துறையின் முதல் கவிதைத் தொகுப்பு.

☐ 8—3 ☐ நவம்பர் '99 ☐ விலை ரூ. 2/- ☐

● 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்' — கண்ணதாசன்.

---

" மூன்றடிக்குள்
ஒரு முத்தான செய்தி;
சிந்தனை; கருத்து;
கற்பனை; காட்சி;
'படார்' என்றோர் அடி...!
இப்படியிப்படித் தமது
உள்ளடக்க உயர்வால்
நிமிர்ந்து நிற்கின்றன



படிப்பகம்

# எய்ட்ஸ் நோயா? பயம் வேண்டாம்!

எய்ட்ஸ் தீர்க்க முடியாத ஒரு நோய் அல்ல. சித்த மருத்துவத்தில் குணமாகிறது. எய்ட்ஸ் என்று உறுதி செய்யப்பட்ட மருத்துவச் சான்றுகளுடன் வர வேண்டும்.

**நோயின் தன்மையைப் பொருத்து 100 முதல் 200 நாட்கள் வரை மருந்துகள் சாப்பிட வேண்டும். நடமாட்டம் இல்லாதவர்களை அழைத்து வர வேண்டாம்.**

**H.I.V.** கிருமிகள் முழுமையாக அழிக்கப்படும் வரை சிகிச்சை அளிக்கப்படும். மருந்துகள் சாப்பிட்டு முடித்த பின்பு 'P 24 ஆன்டிஜென்டெஸ்ட்' என்ற ரத்தப் பரிசோதனை செய்து பார்க்கவும். நெகட்டிவ் ஆக மாறும். இப்பரிசோதனை முறையே போதும். வெஸ்டர்ன் பிளாட் பரிசோதனையில் நெகட்டிவ் ஆக வேண்டுமென்று விரும்புபவர்கள் தொடர்ந்து சிலகாலம் மருந்துகள் சாப்பிட வேண்டும்.

மருத்துவத் துறையில் 45 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றியவர். 73 வயது நிரம்பியவர். அரிமா இயக்கத்தில் 'எய்ட்ஸ் நோய் பிரிவிற்கு' மதுரை மாவட்டத்திற்குத் தலைவராய் இருப்பவர். எகிப்து, இஸ்ரேல், ஜோர்டன் நாடுகளுக்குச் சென்று எய்ட்ஸ் சிகிச்சை முறைகளை விளக்கி வந்தவர்.



சித்த மருத்துவ மேதை :

## அரிமா டாக்டர் A.தேவராஜன், R.M.P.(IND)C.B.I.M.

"எய்ட்ஸ் நோய் ஒழிப்பு மருத்துவ மையம்" 7-3/125 பெருமாள் கோவில் தெரு, பேரையூர் - 625 703.
(மனோன்மணி ஆஸ்பத்திரி) மதுரை மாவட்டம் போன் : 04549 - 25695

குறிப்பு : பேரையூரில் 7-3/125, பெருமாள் கோவில் தெருவில் மட்டுமே எனது மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. வேறு எங்கும் கிளைகளோ, ஏஜெண்டுகளோ கிடையாது. தரகர்கள் யாரும் என் பெயரைச் சொல்லி அழைத்தால் ஏமாந்துவிடாதீர்கள். ஆட்டோ டிரைவரிடம் 'மனோன்மணி ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும்' என்று சொன்னால் அழைத்து வந்து விடுவார்கள்.

**மருத்துவ ஆலோசனைக்கும், பதிவிற்கும் கட்டணம் ரூ.25/- கட்டணமின்றி வரும் கடிதங்களுக்கு பதில் வராது.**

**பேரையூர் வருவதற்கு வழி :** மதுரை To சாப்டூர் பஸ் மார்க்கத்தில் பேரையூர் உள்ளது. வடக்கிலிருந்து வருபவர்கள் மதுரை வந்து பழங்காநத்தம் பஸ் ஸ்டாண்டிலிருந்து புறப்படும் 'சாப்டூர்' பஸ்ஸில் ஏறி T கல்லுப்பட்டி வழியாக பேரையூர் வரலாம். தெற்கிலிருந்து வருபவர்கள் விருதுநகர் பஸ் ஸ்டாண்டிலிருந்து கல்லுப்பட்டி வழியாக பேரையூர் வரலாம்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# ஒரு நூறு கவிஞர்க்கு-
# பல நூறு வாழ்த்துக்கள்!

● - அமுதபாரதி

□ 2, சிவஞானம் தெரு, தி. நகர், சென்னை-17

உலகப் புகழ்ப் பெற்ற மாவீரன் நெப்போலியன் உருவத்தால் குள்ளமாய் இருந்தான். அவனுடன் பயின்ற நண்பர்கள், அவனது குள்ள உருவத்தைக் கூறி, கேலி பேசிச் சிரித்தனர்.

சிரித்தவர்களை நோக்கி, "நீங்கள் எவ்வளவு உயரமாய் இருந்தாலும், என்னிடம் பேசும்போது நீங்கள் எல்லாம் குனிந்துதான் ஆக வேண்டும்" என்றானாம் நெப்போலியன்.

எத்துணை அருமையான சரித்திரச் செய்தி இது!

உருவத்தால் குறுகி இருந்தாலும் உள்ளத்துள் எவ்வளவு கம்பீரம்! பெருமிதம்!

ஐக்கூ கவிதை பற்றிச் சிந்திக்கும்போது நெப்போலியன்தான் என் நினைவுக்கு வருகிறான்.

ஐக்கூவின் முதல் வெற்றி அதன் குறுகிய வடிவந்தான்.

நீட்டி முழக்கி நீண்டு......நீண்டு நீர்த்துப் போகிற சொற்களை நீக்கிவிட வேண்டுமல்லவா கவிதை? அதைத்தான் செய்கிறது ஐக்கூ.

*"இத்தனைச் சொற்களா?*
*உடம்பெல்லாம் வலிக்கிறதே..."*
*கதறும் கவிதை.*

என்கிற எனது கவிதையே நினைவுக்கு வருகிறது எனக்கு.

மூன்றடிக்குள் ஒரு முத்தான செய்தி; சிந்தனை; கருத்து; கற்பனை; காட்சி; 'படார்' என்றோர் அடி... இப்படியிப்படித் தமது உள்ளடக்க உயர்வால் நிமிர்ந்து நிற்கின்றன ஐக்கூ கவிதைகள்.

அதற்காகக் குறுகிய வடிவம் கொண்டதெல்லாம் 'ஐக்கூ' என்றும் கொள்ளக் கூடாது. ஐக்கூ அதன் வெளியீட்டு உத்தியாலும், உள்முகச் செறிவாலும் உயர்வின் உச்சியைத் தொடுகிறது. படிப்பாளியையும் ஒரு படைப்பாளியின் தளத்துக்கு இட்டுச் செல்கிற தனிப்பாங்கு ஐக்கூவுக்கே அதிகம். நிறையச் சொல்வதைவிடவும் நிறைவாய்ச் சொல்வதே [illegible] சிறப்பு. அத்தகைய சிறப்பு ஐக்கூவுக்கு உண்டு.

www.padippakam.com

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜப்பானியக் கவிஞர் பாஷோ படைத்த ஐக்கூக்களில் 'ஜென்' தத்துவங்கள் மிகுந்திருந்தன. அதன் காரணம் அவர் சார்ந்திருந்த கொள்கை. வாழ்ந்த வாழ்க்கை அப்படி.

அவருக்கடுத்து வந்த பூசன், இஸ்ஸா, ஷிகி ஆகிய கவிஞர்களின் ஐக்கூக்களைப் பார்த்தால், ஐக்கூவின் படிநிலை வளர்ச்சிகளும், மாறுதல்களும் புரிய வருகின்றன.

ஆமாம், மாறுதல் என்பதுதானே மாறாத தத்துவம்!

அந்த வகையில், இந்த நூற்றாண்டின் வாழ்முறை, சூழ்நிலை ஆகியவற்றின் பாதிப்புகளால் இன்றைய ஐக்கூக்களும் தமது உள்ளடக்க வெளிப்பாட்டில் தம்மை மாற்றிக் கொள்கின்றன.

ஐக்கூப் படைப்பாளிகளின் சிந்தனைத் திறத்துக்கும், உரத்துக்கும் ஏற்ப படிப்பவர்களின் நெஞ்சில் சென்று பதிகின்றன; வீரியம் மிகுந்தவை வாழ்கின்றன.

---

**"நீட்டி முழக்கி நீண்டு...... நீண்டு நீர்த்துப் போகிற சொற்களை நீக்கிவிட வேண்டுமல்லவா கவிதை? அதைத் தான் செய்கிறது ஐக்கூ."**

---

கடந்த எட்டாண்டுக்கு மேலாக இடைவிடாது வெளி வருகிற 'ஏழைதாசன்' ஆசிரியர் திரு. எஸ். விஜயகுமார் அவர்களின் அன்பு மடல் எனக்குக் கிடைத்தது. அதனோடு ஏழைதாசனின் வெளியீடாக வருகிற இந்த நூறு ஐக்கூக் கவிதைகளின் தட்டச்சுப் படிகளும் கிடைத்தன. மகிழ்ச்சியால் மனம் நிறைந்தேன். எத்தனைப் பெரிய பாராட்டுக்குரிய செய்தி இது! பெருந்தன்மை இது!

ஏற்கனவே இந்திய சுதந்திரப் பொன்விழாவை முன்னிட்டு ஐம்பது கவிஞர்களின் ஐக்கூக்களைத் தொகுத்துப் பெருமை சேர்த்தது ஏழைதாசன்.

இனி, இத்தொகுதியின் கவிதைகளைக் கவனிப்போம்...

*நாங்களும்*
*முக்கியப் பிரமுகர்கள் தான்*
*தனி கிளாசில் டீ!*

பிழை மலிந்த அவலத்தைப் புறந்தள்ளி, அகமனத்தின் பெருமிதத்தை வெளிப்படுத்தியுள்ள நாகை ஆசைத்தம்பியின் இந்தக் கவிதை நெப்போலியனை நினைவூட்டுகிறதா, இல்லையா?

வழக்கமான பழமொழிக்கு முரணாக,

*"சுத்தம் சோறு போடாது"*
*புதுமொழிச் சொன்னான்*
*எச்சிலைச் சிறுவன்.*

படிப்பகம்

www.padippakam.com

என்னும் ஐக்கூ இன்றைய யதார்த்தத்தை அல்லவோ தோலுறிக்கிறது!

அப்படியேதான் கிணத்துக்கடவு கிருஷ்ணகுமார், குமாரசாமிப் பேட்டை பாரதிராஜா, அவனியாபுரம் அருணகிரி, விஜயவாடா உதயகுமார் அரிசிப்பாளைம் சூர்யநிலா, கரடிப்பட்டி காந்திதாசன், அவனியாபுரம் சுலோபா, புதுவண்ணை சிவா, பெங்களூர் இளங்கோவன், பாலையம்பட்டி இராமச்சந்திரன், பெட்டவாய்த்தலை ரமேஷ் போன்ற கவிஞர்களின் கவிதைகளும்.

இந்தத் தொகுப்பில் மென்மையான கற்பனைகளும், மேன்மையான சிந்தனைகளும் கனிந்த கவிதைகள் கைகோர்த்து நெஞ்சில் நிறைகின்றன.

புதுவை தமிழ்நெஞ்சன், செல்லம்மாள் கண்ணன், மு. முருகேஷ், பழனி இளங்கம்பன், முத்து எத்திராசன், ஏழைதாசன், திருவை குமரன் போன்று எனக்குத் தெரிந்த கவிஞர்களும், குடந்தை ஆர்.எஸ். நாதன், நந்தவனம் சந்திரசேகரன், ந. விஜய், எல். இளங்கோ செல்வியர் வெ. சரஸ்வதி, சே. பிருந்தா...எனத் தொடர்கிற கவிஞர்களும் மனதுக்குள் மத்தாப்பூ விதைக்கிறார்கள்!

---

**"நிறையச் சொல்வதை விடவும் நிறைவாய்ச் சொல்வதே கவிதைக்குச் சிறப்பு. அத்தகைய சிறப்பு ஐக்கூவுக்கு உண்டு. இந்தத் தொகுப்பில் மென்மையான கற்பனைகளும், மேன்மையான சிந்தனைகளும் கனிந்த கவிதைகள் கைகோர்த்து நெஞ்சில் நிறைகின்றன."**

---

பொறிஞர் தாமல் கண்ணன், பொறிஞர் மகா. மதிவாணன், முனைவர் இந்திரசித்து, முனைவர். தமிழப்பன், டாக்டர். மாடப்பள்ளி ஜெயசீலன், இராணுவக் கவிஞர். துரை. மூர்த்தி போன்று — வாழ்க்கைக்காக வெவ்வேறு துறையில் பணியாற்றுவோரையும் கவிதை பிணித்திருப்பது காணப் பெருமிதம்... பெருமிதம்... மிகுந்த பெருமிதம்!

சற்றுக் காலங்கடந்து வந்தாலும், காலம் கடந்து வாழவிருக்கிற கவிதைகளுக்கும், கவிஞர்களுக்கும் எனதினிய வாழ்த்துக்கள் என்றும் உண்டு.

அடுத்து வருங் காலத்தில் ஆயிரம் கவிஞர்களை அரவணைக்கவிருக்கிற — இப்போது நூறு கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து வெளியிடுகிற இனிய மனத்தர் 'ஏழைதாசன்' எஸ். விஜயகுமார் அவர்களை எப்படிப் பாராட்டலாம் ...?

படிப்பகம்

இதோ, எனது சத்தமில்லாத முத்தம்! ★

www.padippakam.com



# ஓவியக் கவிஞர்

# அமுதபாரதி

திருவள்ளூர் மாவட்டம் சார்ந்த மாமண்டூர் எனும் சிற்றூரில் 31-8-1939ல் பிறந்தவர் அமுதபாரதி. இவரது இயற்பெயர் எம்.கே. தாயுமானவன்.

ஓவியங்கள் வரைகையில் 'அமுதோன்' எனக் கையெழுத்திடும் இவர், கவிதைகள் படைக்கையில் 'அமுதபாரதி' யாகிறார்.

இவர் யாப்பறிந்து பா புனையும் புலமையாளர்; புதுக்கவிதைகள் வடிக்கும் புதுமையாளர்; தமிழின் முதல் ஐக்கூ கவிதை நூலான 'புள்ளிப் பூக்கள்' தந்த பெருமையாளர்.

உதய காலங்கள், இணை தேடும் இதயம், மன்மத ராகங்கள், நிகழ்கால மேகங்கள், புள்ளிப் பூக்கள், காற்றின் கைகள், ஐக்கூ அந்தாதி, ஐக்கூ அருவிகள் என இதுவரை எட்டுக் கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்.

இவர் தம் கவிதைப் பணிகட்காக, தமிழக அரசு 1991-ஆம் ஆண்டில் 'பாவேந்தர் விருது' அளித்துப் பெருமை சேர்த்தது.

அறுபதுகளில் கவியரசர் கண்ணதாசன் அவர்கள் நடத்திய 'கண்ணதாசன்' இலக்கிய இதழில், இவர் ஓவியங்களையும், கவிதைகளையும் நிரம்ப வரைந்தமைக் கண்ட திரு. கண்ணதாசன் அவர்கள், இவருக்கு 'ஓவியக் கவிஞர்' எனும் சிறப்புப் பட்டத்தை வழங்கி மகிழ்ந்தார்.

ஓவியத் துறையில் பல்லாயிரக்கணக்கான புத்தகங்களின் மேலட்டை ஓவியங்களையும், உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்பு மலர்கள், மற்ற கிழமை, திங்கள் இதழ்கள் ஆகியவற்றுக்கான சித்திரங்களையும் வரைந்து புகழ்ப் பெற்றார். ஓவிய அழகுடனும், உள்ளார்ந்த கருத்துச் செறிவுடனும், வெளிவந்துள்ள இவர் தம் கவிதை நூல்களை ஆய்ந்து கல்லூரி மாணவர்கள் பலர், பல்கலைக் கழகங்களில் பட்டங்கள் பெற்றுள்ளனர்.

மரபு, புதிது, ஐக்கூ எனும் கவிதை மரபில் 'தலைமுறை இடைவெளி' யின்றி கவிதைகள் படைத்து வரும் இவர், ஐக்கூ கவிதைத் துறையில் தனித்த

படிப்பகம்

www.padippakam.com

★ 1

சக்திமானில்
தொலைந்த பிள்ளைகள்...
மின்வெட்டில் மகிழ்ந்தேன்!

— புதுவை. **தமிழ்நெஞ்சன்**
மீனாட்சிப்பேட்டை, புதுச்சேரி-9

★ 2

சாதிச் சான்றிதழ்
வரிசையில்
சமத்துவபுர வாசிகள்!

— அக்கரைப்பட்டி. **கனகராஜ்**
தெப்பக்குளம், திருச்சி-2

★ 3

என் எதிர்காலத்தை
மெதுவாய்த் தேடு கிளியே...
உன் சுதந்திரம் நீடிக்கட்டும்!

— செல்வி. **ஆர். சித்ரா**
பச்சைப் பெருமா நல்லூர், சீர்காழி

★ 4

மலர்க்கொடியில்
சிறகடிக்கும் பூ
வண்ணத்துப் பூச்சி!

— **சச்சின் சக்திவேல்**
மயிலாடுதுறை, நாகை

★ 5

ஜன்னலினூடே
சில்லாடும் சிறுமிகள்...
கிழிந்த தாவணியுந்தான்!

— **ஹ ர ணி**
படிப்பகம்
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை-5

www.padippakam.com

★ 6

சிகரக்கும் அவனும்
குளத்தங்கரையில்
மாமிசத்துக்காக!

— சிவகவி காளிதாசன்
பனைவயல், அறந்தாங்கி

★ 7

நாங்களும்
முக்கிய பிரமுகர்கள்தான்
தனி கிளாசில் டீ!

— நாகை ஆசைத்தம்பி
வி.கே. பாளையம், கோவை-31

★ 8

அலைபாயும் மனசு
முயன்று தோற்றது.
எய்ட்ஸ்!

— செல்வி. என். சாந்தா
சுரக்குடி, திருநள்ளாறு

★ 9

பார்ப்பவள் மீதெல்லாம்
மஞ்சள்நீர் தெளிக்கிறாள்
அந்தித் திருவிழாவில் சூர்யகன்னி!

— ஜனநேசன்
ஸ்ரீராம் நகர், காரைக்குடி-3

★ 10

வேலியே வேலியை மேய்ந்தது
காவல் நிலையத்தில்
'லெஸ்பியன்' உறவு!

— மு. மகேந்திரபாபு
படிப்பகம்
பொன்னையா புரம், தூத்துக்குடி

www.padippakam.com

★ 11

சுந்தம் சோறு போடாது
புதுமொழிச் சொன்னான்
எச்சிலைச் சிறுவன்!

— கவி. சலீம்
புதுக்குடியிருப்பு, நாகர்கோவில்-1

★ 12

நுனிநாக்கு ஆங்கிலத்தில்
எங்கள் பிள்ளைகள்...
நாங்கள் தமிழர்கள்!

— ச. அருண்
இருமாத்தூர், தருமபுரி

★ 13

இலட்சங்களும் கோடிகளும்
நிறைவு பெறுகின்றன
வாக்காளரெனும் பூஜ்ஜியத்தால்!

— சமரன்
திருவரங்குளம், ஆலங்குடி

★ 14

இரவே விடியாதே.
பகல் பயமுறுத்துகிறது...
கால் முளைத்த பேய்கள்!

— பொன். குமார்
தாதகாப்பட்டி, சேலம்-6

★ 15

வியாபாரக் கல்வி
வாசலில் நிறுத்தும்
வறுமைச் சிறார்கள்!

— கவி. பாலபரணி
அவலூர்ப்பேட்டை, விழுப்புரம்

படிப்பகம்

www.padippakam.com

★ 16

எச்சில் கையால்
காக்கை ஓட்டாதவன்
காதலிப்பதற்கு முன்பு வரை!

— இரா. இரவி
திருமலை மன்னர் அரண்மனை, மதுரை-1

★ 17

நூலறுந்த பட்டங்கள்
உயர உயரப் பறக்கின்றன
ஓ.. பறவைகள்!

— செங்கை. கருணாகரன்
இராஜாஜி-சாலை, செங்கற்பட்டு-1

★ 18

காலடிப் பதிவை
கவிதையாக்கிப் போகும்
கொலுசுச் சிணுங்கல்!

— செல்வி. சே. பிருந்தா
காசிமுனியப்பன் கோவில், சேலம்-1

★ 19

இங்கிலாந்து மாடும் அம்மா என்கிறது
இங்குள்ள தமிழ்க் குழந்தை
மம்மி என்கிறதே!

— குறளன்பன் ஆ. வே. இராமசாமி
வைரிசெட்டிப் பாளையம், திருச்சி

★ 20

குளிர்ந்த தெங்கிள நீர்
குடித்த பின் கொதிக்கிறது
வெட்டுபவன் நிலை!

— செம்பவளம்
இலட்சுமிபுரம், பழனி

படிப்பகம்

www.padippakam.com

★ 21

தலையணை மந்திரத்தில்
தவிடு பொடியானது
தாயின் சீராட்டு!

— **மா. சந்திரசேகர்**
மேட்டு மகாதானபுரம், கரூர்

★ 22

மெழுகுவர்த்தியால்
விளக்கேற்றினார் மந்திரி.
தீப்பெட்டியில் வியர்வை நாற்றமோ!

— **சோ. கிருஷ்ணகுமார்**
கிணத்துக்கடவு, கோவை

★ 23

மரமாய் வளர்ந்தாலும்
நிழல் தரவில்லை எவருக்கும்
போன்சாய்!

— **இராஜேஷ் ஞானிதாசன்**
தலத்தெரு, காரைக்கால்

★ 24

உதிரப் போகும் மலர்களுக்காக
காத்திருக்கின்றன
மொட்டுகள்!

— புலவர். **முத்து எத்திராசன்**
தி. நகர், சென்னை-17

★ 25

சர்க்கார் தராத வேலை.
சற்றே நிமிர்ந்தேன்
சுயவேலை!

— **ந. விஜய்**
அடப்பன்வயல், புதுக்கோட்டை-2

படிப்பகம்

www.padippakam.com

வாங்கிய
கடனை அடைத்தேன்
கடன் வாங்கி!

— வைகறை
அடைக்கலாபுரம், திருச்செந்தூர்

★ 27

மேகங்களின் புணர்ச்சி
இழந்த காதலை நினைவூட்டும்
மழையில்லா இடி!

— பொறிஞர். தாமல் கண்ணன்
பெங்களூர், கர்நாடகா

★ 28

பிச்சைக்காரன் கையில்
தங்கத் திருவோடு.
போலி ஜனநாயகம்!

— முடவை. இளமுரசு
பூக்கொல்லை, பட்டுக்கோட்டை

★ 29

எங்கும் தமிழ்
எதிலும் தமிழ்
வாழ்க சன் டி.வி.!

— பொன். தங்கராசு
திலகர் திடல், புதுக்கோட்டை-5

★ 30

பாழ்படுத்தப் பட்டதால்
பால் கொடுக்கிறாள்
சின்னஞ்சிறு சிறுமி!

— ப. பாரதிராஜா
குமாரசாமி பேட்டை, தருமபுரி

படிப்பகம்

www.padippakam.com

★ 31

வேலை பெற
சம்பளம் தந்தேன்
லஞ்சமாய்!

— கவி. மூ. அருணகிரி
அவனியாபுரம், மதுரை-12

★ 32

மினுக்கிட்டான் பூச்சிகள்
இலவச மின்சாரம்
நிலாச் சோறு!

— திருமதி. பழனியம்மாள் கணேசன்
மிதில்லைப்பட்டி, அறந்தாங்கி

★ 33

திருவிழா வரட்டும்
வேசம் போட்டு ஆடுவேன்
மற்றவர் வேசம் கலைக்க!

— பொறிஞர். மகா. மதிவாணன்
செய்யாறு, திருவண்ணாமலை.

★ 34

என் சுவாசக் காற்று நீதான்.
பயமாக இருக்கிறது
ஊரெங்கும் புகை மண்டலம்!

— ல சி
ஒட்டிமொரா ஓசஹட்டி, நீலகிரி

★ 35

தோட்டம் அழித்து
வீடு கட்டினான்
தொட்டியில் செடி!

— பொன். முருகேசன்
சூளைமேடு, சென்னை-94

படிப்பகம்

www.padippakam.com

★ 36

செத்த பிறகும்
அடித்தால் அலறும்
முரசாய் விலங்கின் தோல்!

— சி. விநாயகமூர்த்தி
ஏழூர் சாலியர் சத்திரம், பழநி

★ 37

பட்ஜெட்டின் மீது விவாதம்
தொலைக்காட்சியில்.
வாசலில் அதே பிச்சைக்காரி!

— கோ. உதயகுமார்
விஜயவாடா, ஆந்திரா

★ 38

உங்கள் பெற்றோரை
அனாதை ஆக்காதீர்கள்.
அன்னை தெரசா இல்லை!

— திருச்சிற்றம்பலம் சுரேஷ்
திருக்கண்டேஸ்வரம், கடலூர்

★ 39

மழைக் காலம்.
தூரத்தில் நெருப்பு.
குயில் கூவுகிறது!

— முனைவர் க. இந்திரசித்து
உடுமலைப்பேட்டை, கோவை

★ 40

ஆண்மை அற்றவர்க்கு
அழகான குழந்தை.
சோதனைக் குழாய் வாழ்க!

— சூர்யநிலா
அரிசிப்பாளையம், சேலம்-9

படிப்பகம்

www.padippakam.com

★ 41

சரளமாக்
ஆங்கிலம் பேசினார்
தமிழ் டி.வி. பார்த்து!

— எஸ். குமார்
குரு காலனி, சிவகாசி

★ 42

பறக்கும் நிழற் சுவடுகள்
கைகளில் பிடிபடவில்லை
மௌனமாய்ப் பூக்கள்!

— செல்லம்மாள் கண்ணன்
வியாசர்பாடி, சென்னை-39

★ 43

மேய்ச்சல் மைதானத்தில்
பசித்திருக்கும்
கைத்தடிச் சிறுவன்!

— சபீர் அக்பர் அலி
பாலக்கரை, திருச்சி-8

★ 44

மூடிய ஆலை,
தொப்பைப் போடும்
தொழிற் சங்கம்!

— செல்வி. த. மஞ்சு
போயம் பாளையம், திருப்பூர்

★ 45

குழந்தையில்லா
குறைப் போக்கும்
குப்பைத் தொட்டி!

— ஆர். [illegible]ாந்திதாசன்
காடிப்பட்டி, நாமக்கல்

படிப்பகம்

www.padippakam.com

★ 46

வ்டிக்கத் தயாராகு.
பானையில் அரிசியில்லை
கண்ணீரையாவது!

— சி. விஜயகுமார்
கொத்தமங்கலம், ஆலங்குடி

★ 47

கொள்ளையடிக்கும்
காற்று.
களவு போகும் வாசம்!

— கு. வேல்வேந்தன்
காட்டுமன்னார்கோவில், சிதம்பரம்

★ 48

கடற்கரையில் திரளும்
காற்று வாங்கும் கூட்டம்
மாத கடைசி!

— இளவல் ஹரிஹரன்
அடையாறு, சென்னை-20

★ 49

என்னருகில் அமர்ந்திருப்பவர்
எழுந்திருப்பவராய்த் தெரியவில்லை.
கர்ப்பிணி நிற்கிறாள்!

— எல். இளங்கோ
நெல்வாய்த் தோப்பு, வேலூர்

★ 50

வெறும் புகை வரும்
இரட்டைக் குழல் துப்பாக்கி
மூக்கு!

— முனைவர் தமிழப்பன்
அண்ணாநகர், சென்னை-40

படிப்பகம்

www.padippakam.com

★ 51

பாறை மீது அமர்ந்து
அவன் செய்யும் தியானம்
தக்கை மூழ்கும் வரை!

— மகா. மைகண்டன்
செய்யாறு, திருவண்ணாமலை

★ 52

நிமிர்ந்து நின்றது புல்.
வளைத்துக் காட்டியது
ஒரேயொரு மழைத்துளி!

— ப. ஆனந்தன்
முருங்கப்பாக்கம், புதுச்சேரி-1

★ 53

சிட்டுக் குருவியின்
ஈரக்கால் சுவடுகள்...
அற்புதக் கோலம்!

— டாக்டர். மாடப்பள்ளி ஜெயசீலன்
மடவாளம், வேலூர்

★ 54

ஊழல் எங்கள் பிறப்புரிமை
பாரதத்தின் ஆட்சிக் கால
சாப சம்பாத்தியங்கள்!

— பி. கே. நஞ்சன்
கீழூர் மைநிலை, நீலகிரி

★ 55

எப்போது ஆகும் பனிரெண்டு மணி?
சேரத் துடிக்கின்றன
கடிகார முட்கள்!

படிப்பகம்
— ம. காளிதாசன்
பங்கேத்தான்குடி, அறந்தாங்கி

www.padippakam.com

★ 56

எத்தனை பகிரங்கமாய்ச்
சொல்கிறார்கள் பொய்.
எங்கே இருக்கிறது மனசு?

— ஸ்ரீநிவாஸப்ரபு
இஞ்சப்பாக்கம், சென்னை-11

★ 57

சாலை மழைநீர்
ஆடை தூக்கச் சேறானது
மனசு!

— சிவதாசன்
இராமநாத புரம், திருப்பூர்

★ 58

எல்லா ஏரிகளும்
நிரம்பி வழிகின்றன...
குடிசைகளாய்!

— இராணுவக் கவிஞர் துரைமூர்த்தி
கொல்லப் பாளையம், ஆர்க்காடு

★ 59

நாற்றமெடுத்த
ஊர்க்கதையும் கோர்த்து விற்கிறாள்
பூக்காரி!

— கவி. சுலோபா
அவனியாபுரம், மதுரை-12

★ 60

மரங்களை
வெட்டினார்கள்
மரம் நடு விழாவிற்கு!

— செ. இராஜேந்திரன்
படிப்பகம்
பனவடலிச் சத்திரம், நெல்லை

www.padippakam.com

★ 61

இரும்பின் பெருமிதம்
காந்தத்தில்
சிக்கிக் கொண்டது!

— திருமதி. வீ. வளர்மதி
சங்கர் நகர், சேலம்-7

★ 62

வருகிறது தேர்தல்.
தொற்றிக் கொண்டது
கலவர பயம்!

— நீடா.சி. இளஞ்செழியன்
சாலிய மங்கலம், தஞ்சாவூர்

★ 63

பூவை வாழ்த்தச் சென்றேன்;
திரும்பி விட்டேன்.
பழமாகட்டும் பார்க்கலாம்!

— டாக்டர். இளங்கம்பன்
சித்திரக் கூடம், பழநி

★ 64

மழையில் நனைய ஆசைதான்
சட்டைப் பைக்குள்
அவளின் கடிதம்!

— தங்கம். மூர்த்தி
சார்லஸ் நகர், புதுக்கோட்டை-5

★ 65

நடப்பட வேண்டிய நாற்றுகள்
அறுவடையாகின்றன...
கூலிச் சிறுவர்கள்!

— இராம. இளங்கோவன்
பெங்களூர், கர்னாடகா

படிப்பகம்

www.padippakam.com

★ 66

பால் முகம்.
பருத் தொல்லை.
நிலவில் களங்கம்!

— **வே.ம. தமிழரசு**
பரமத்தி-வேலூர், நாமக்கல்

★ 67

கோயில் வாசல்.
பசியில் அழும் குழந்தை.
பாலில் குளிக்கும் சாமி!

— வழக்கறிஞர் **வண்ணை. சிவா**
புதுவண்ணை, சென்னை-81

★ 68

கையில் பணமிருந்தும்
செலவழிக்க மனமில்லை.
அவள் கொடுத்த பரிசு!

— **எஸ். அடுமை**
முஸ்லிம் தெரு, இராமேஸ்வரம்

★ 69

ஆற்றில் போட்டாலும்...
காவிரிக்கு டி.எம்.சி.
கணக்குப் பார்க்கும் கர்னாடகா!

— **அ. செந்தில்குமார்**
கொத்தமங்கலம், ஆலங்குடி

★ 70

சமாதானம் பேச
வந்தவர்களுக்கு
வெண்புறா விருந்து!

— பேராசிரியர். **கோ. அசோகன்**
அரூர், தருமபுரி

படிப்பகம்

www.padippakam.com

★ 71

கொடிகூட
படர வரவில்லை.
ஜன்னலில் விதவை அக்கா!

— **ஜெ. பாலகிருஷ்ணன்**
கிணத்துக்கடவு, கோவை

★ 72

அடிக்காதே அம்மா.
வறுமைக் கோட்டை அழிக்கத்தான்
ரப்பர் விழுங்கினேன்!

— திருமதி. **அரும்பை. பூமதி**
மந்தாரக் குப்பம், நெய்வேலி-2

★ 73

சிதைந்தது பண்பாடு.
சேர்ந்து வந்தது
எய்ட்ஸ்!

— **க. குழந்தைவேல்**
மேட்டுத் திருக்காம்புலியூர், கரூர்

★ 74

ஓ! மனிதனே...
தாலாட்டுப் பாடும் போதே
ஒப்பாரியும் எழுதப்பட்டு விட்டது!

— **நவோதயா செந்தில்**
கைலாசர் கோயில் வீதி, காரைக்கால்

★ 75

உதடுகள் பிரசவிக்கும்
குழந்தை
புன்னகை!

— திருமதி. சீரா. **அரங்கநாயகிராவ்**
புளியங்கொட்டை சாலை, காரைக்கால்

படிப்பகம்

★ 76 www.padippakam.com

உடல் அழுக்கை கழுவியாச்சு.
உள்ளழுக்கை?
சாதிக்குளம்!

— சு.ப. கலாபாரதி
சிலட்டூர், அறந்தாங்கி

★ 77

மொழிப் பிரச்சனை
இல்லாமல் வாழும்
பிறவி ஊமை!

— ஆரிராம். மாயவன்
கம்பம், தேனி

★ 78

பிணத்தை யார் புதைப்பது?
கலவரத்தில்
நான்கு பிணங்கள்!

— சந்திரா மனோகரன்
சம்பத் நகர், ஈரோடு-11

★ 79

தெருமுனையும்
ஐ.நா. சபையானது
பல வண்ணக் கொடிகள்!

— மூ. தனகோபாலன்
மன்னார்குடி, திருவாரூர்

★ 80

குளியலறைக் கதவில்
ஆடையும் முகமூடியும்.
வெளிப்படும் பாடல்!

— அ. அருள்மொழி வேந்தன்
மணிப்பள்ளம் சாலை, புதுக்கோட்டை-1

படிப்பகம்

www.padippakam.com

★ 81

குளவிபட்ட கஷ்டம்
மனிதனுக்கா தெரியும்?
கலைந்தத் தேன்கூடு!

— ஆ. ஆத்மநாதன்
தங்கவேல் நகர், பட்டுக்கோட்டை-1

★ 82

ஞாயிறு—
உனக்கு ஓய்வு நாள்.
கால்நடைக்குக் கொலைநாளா?

— எஸ்.ஜி. இசட்கான்
ஏஸ்.வி. குடியிருப்பு, திருப்பூர்-2

★ 83

துண்டு பீடிகளுக்குப் பஞ்சம்.
புகைக்கூட
வயிறு நிரப்புகிறது!

— போளூர். நா. குமராசன்
அரும்பாக்கம், சென்னை-106

★ 84

பூமி—
ஷவர்பாத் எடுக்கிறது
மழைத் தூறல்கள்!

— செல்வி. கு. குறள்மணி
பெருமாள் புரம், பவானி

★ 85

இருட்டின் கூந்தலில்
மல்லிகைச் சரங்கள்.
மறந்து போனது... வழி!

படிப்பகம்
— மு, முருகேஷ்

www.padippakam.com

★ 86

உறவில் இணையும் குயில்கள்
காட்சிகளைத் திருடும் விழிகள்
மனிதத்தில் வேர்விடும் வக்கிரம்!

— **திருவை. குமரன்**
மளிகைத் தெரு, திருச்சி-2

★ 87

ஊர் திரும்ப வேண்டும்.
பசித்திருப்பாள்
அம்மா!

— குடந்தை. **ஆர்.எஸ். நாதன்**
கும்பேஸ்வரர் திருமஞ்சன வீதி, கும்பகோணம்-1

★ 88

உழைத்தவனுக்கு மிட்டாய்.
தலைவருக்குப் புட்டாடை.
சுதந்திர தினம்!

— பேரா. **க. இராமச்சந்திரன்**
பாலையம்பட்டி, அருப்புக்கோட்டை

★ 89

மலர்விட்டு மலர் தாவும்
வண்டுகளோ
இன்றைய இளைஞர்கள்?

— செல்வி. **க. வினிதா**
போர்ட்பிளேயர், அந்தமான்

★ 90

கிளைகளும் சேர்ந்தே காய்கின்றன
காயம்பட்டது அடிமரம்
பால்வினையால்!

— **எச். ஷேக்முகம்மது**
நூல் கடை வீதி, காரைக்கால்

படிப்பகம்

www.padippakam.com

★ 91

வண்ணத்துப் பூச்சியே,
என் வீட்டோரம் வராதே.
வெள்ளைப் புடவை அக்கா!

— நந்தவனம் சந்திரசேகரன்
உறையூர், திருச்சி-3

★ 92

பூவில் வியர்வை.
விசிறுகிறது
பட்டாம்பூச்சி!

— செல்வி. வெ. சரஸ்வதி
திரேஸ்புரம், தூத்துக்குடி-1

★ 93

செருப்பில்லா கால்கள்.
செக்கு மாட்டு வாழ்க்கை.
கரும்புத் தின்னக் கூலியா?

— துல. சேகர்
சோளங்கா பாளையம், ஈரோடு

★ 94

ஆறு மாதமுன் தேனிலவு!
அடிவயிற்றில் பூகம்பம்.
கணவன் கார்கிலில்!

— சிந்துஜா
இலாசுப் பேட்டை, புதுச்சேரி-8

★ 95

தெரு விளக்குகள்
தினம், தினம் தேடுகின்றன...
இன்னொரு ஆபரஹாம் லிங்கனை!

படிப்பகம்

— கூ.நா. கல்யாணசுந்தரம்

www.padippakam.com

★ 96

அரிந்து முடிந்ததும்
அழ வைத்தது
வெங்காயம்!

— செல்வி. ச. அம்சவேணி
குமாரபாளையம், ஈரோடு

★ 97

பட்டினிச் சாவுதான்.
பரவாயில்லை.
போராடி மடிவோம்!

— எம். சேகரன்
மேல ரத வீதி, இராமேஸ்வரம்

★ 98

அன்பைப் போதிக்கும்
கடவுள்கள்
கையில் ஆயுதத்துடன்!

— மூ. ரமேஷ்
பெட்டவாய்த்தலை, திருச்சி

★ 99

தென்றலுக்கு வாசம்
வழங்குகின்றன
பூக்கள்!

— அ. கந்ததாசன்
பூவரசக்குடி, ஆலங்குடி

★ 100

விடியாத இரவுகள்
என்றைக்கும் இல்லை.
நம்பிக்கைத்தான் வாழ்க்கை!

படிப்பகம் ரஜைஜதாசன்
அடப்பன்வயல், புதுக்கோட்டை-2

கிளினிக் : ✆ 24954 வீடு : ✆ 22655

அனைத்து சித்த, ஆயுர்வேத, யுனானி மருந்துகளும்
கிடைக்கும் ஒரே ஸ்தாபனம்!

# ராசி சித்தா மெடிக்கல்ஸ்

17, பழனியப்பா காம்ப்ளக்ஸ்
மேல ராஜ வீதி, புதுக்கோட்டை - 622 001.

இங்கு,

- தோல் வியாதிகள்,
- மூலம், குடல்புண்,
- மேக நோய், சிலந்தி,
- வெள்ளை வெட்டை,
- வாத நோய்,
- சொப்பன ஸ்கலிதம்,
- ஆஸ்துமா, காச நோய்,
- ஈஸினோபீலியா,
- ஆண்மைக் குறைவு,
- நரம்புத் தளர்ச்சி, மலடு முதலிய நோய்களுக்கும்,

குழந்தைகளுக்கு உண்டாகும்

- கரப்பான்,
- பிரைமரி காம்ளக்ஸ் முதலிய நோய்களுக்கும்

மாலை 6 மணி முதல் 9 மணி வரை சித்த மருத்துவ ஆலோசனை வழங்கப்படும்.

**Dr. T. இராஜேந்திரன் B.S.M.S.,**

**Dr. Mrs. AP. ஞானேஸ்வரி B.S.M.S.,**

www.padippakam.com

படிப்பகம்

EALAIDHASON ★ TAMIL MONTHLY ★ RNI. Regd. No. 55308 / 92
R.C. No. 3914 / 96. ★ POSTAL No. TN / PDK / 16 / 92.
www.padippakam.com

## ஆசிரியர் தொகுதி

**இதழ் எண் : 72**

மூன்றே அடிகளுக்குள் ஒரு கவித்துவத்தை சூட்சமமாக படைப்பாளி ஒளித்து வைக்கிறான். அதைப்படித்து வாசிப்பாளன் கண்டுணர்கிறான்.

உலகம் முழுக்க இந்தச் சின்ன வடிவத்தைக் கவிஞர்கள் கையாளுகிறார்கள். அண்மையில் டென்மார்க் கவிஞர். பொன்னண்ணா அவர்கள் ஹைக்கூ எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக எழுதி இருந்தார்.

நூற்றியம்பதுக்கும் மேற்பட்டக் கவிஞர்கள் ஆயிரத்துக்கும் மேலான கவிதைகளை அனுப்பி தேர்வைத் தீவிரப்படுத்திய கவிஞர்களுக்கும் பல வேலைகளுக்கு நடுவில் அணிந்துரை வழங்கிய அமுதபாரதிக்கும் நன்றி உரித்தாகுக.

மிகுந்த நிதிப் பற்றாக்குறையால் இத்தொகுப்பு முயற்சி இப்போதுதான் வெளியிடப்படுகிறது. வாசகர்கள், படைப்பாளர்கள் சந்தா ரூ 25 செலுத்திட வேண்டுகிறோம்.

தமிழ் இதழியல் துறையின் இந்த முதல் முயற்சியைத் தோழமை இதழாளர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

## நன்றி!

அறிவிப்பு வெளியிட்டு உதவிய தோழமை இதழ்கள்

- தாழம்பூ
- அறிவே துணை
- மகாகவி
- பாப்பா மடல்
- சிநேகம்

தேர்வில் துணை நின்றத் தோழர்கள்

- தங்கம். மூர்த்தி
- அருள்மொழி வேந்தன்

★ பதிவு பெற்ற இதழ் ★

1913, வடக்கு ராஜ வீதி, புதுக்கோட்டை-1ல்
எஸ். முருகையாவால் [illegible] பிரிண்டர்ஸில் அச்சிட்டு,